# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

தூலை 2019
திபி 2050 . மலர் 1 . இதழ் 4



## நாம் தமிழர் கட்சி

# பதிப்புரை

## இவ்விதழில்


1. திராவிட இயக்கம் தமிழர்களுக்கு இட ஒதுக்கீட்டில் இழைத்த அநீதி
2. விருந்தினர் பக்கம்
3. வந்துவிட்டார் இளவரசர்
4. விதைகளே பேராயுதம்
5. மக்கள் களம்


"எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."

- தலைவர் பிரபாகரன்

அணுக்கழிவு சேமிப்பு மையம், தண்ணீர் தட்டுப்பாடு, மீண்டும் ஹைட்ரோ கார்பன் திட்டம், எட்டுவழிச் சாலை என தமிழகம் முழுவதும் பிரச்சனைகள்.

50 ஆண்டுகால திராவிட ஆட்சியின் சாதனை இது தான்.

தமிழக அரசின் பொருளாதார நிலையோ தலைசுற்ற வைக்கும் நிலையில் உள்ளது.

தமிழக அரசியல்வாதிகளோ ஆட்சியைக் காப்பாற்றவும், ஆட்சியைக் கைப்பற்றவுமே நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் வேலூர் நாடாளுமன்றத் தேர்தல் வந்துள்ளது. குற்றஞ்சாத்தப்பட்டவர்களே மீண்டும் நிற்பது முரண். நாம் தமிழரின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டிய நேரம் இது. நிச்சயம் ஒலிக்கும்.

வெல்லப்போறான் விவசாயி !

ஆசிரியர் குழு

இந்தியாவில் இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்திய முதன்மை மாநிலங்களுள் ஒன்று தமிழகம். நீதிக்கட்சி 1921 ஆம் ஆண்டு வகுப்புவாரி இட ஒதுக்கீட்டைக் கொண்டுவந்தது.

இட ஒதுக்கீட்டின் நோக்கம் அதிகாரப் பரவலாகும். அரசியல் அதிகாரம், சமூகத்தின் ஒரு பகுதியினரின் கையில் அல்லாமல் அனைவரிடமும் இருக்க வேண்டும். அதுவே மக்களாட்சிக்கு நல்லது.

திமுக ஆட்சியில் 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை ஆய்வு செய்ய சட்டநாதன் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

அக்குழு 1970 ஆம் ஆண்டு தன் அறிக்கையைத் தாக்கல் செய்ததது.

இட ஒதுக்கீட்டில் உள்ள சமமற்றத் தன்மையை இது காட்டியது..

இட ஒதுக்கீட்டில் உள்ள சமமற்றத் தன்மையை சட்டநாதன் விசாரணைக் குழு காட்டியது.

| Sno | Caste | Population | Education | | | Posts | | TNPSC Group II | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (a) | (b) | (c ) | Non-Gazetted | Gazetted | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 |
| 1 | | 1,10,102 | 2,066 | 17 | 31 | 703 | 20 | 4 | 10 | 9 | 1 | 12 | 11 |
| 2 | | 2,00,000 | 5,755 | 47 | 83 | 1,050 | 44 | | | | | | |
| 3 | | 4,70,505 | | | | 2,605 | 49 | 18 | 16 | 21 | 21 | 43 | 34 |
| 4 | | 1,87,829 | 1,216 | 18 | 17 | 1,058 | 21 | 3 | 8 | 7 | 8 | 9 | 14 |
| 5 | | 91,447 | 1,485 | 4 | 7 | 455 | 6 | 6 | 8 | 5 | 3 | 8 | 12 |
| 6 | | 1,62,812 | 1,026 | 35 | 16 | 521 | 13 | 3 | 5 | 5 | 3 | 13 | 5 |
| 7 | | 1,08,262 | 3,086 | 13 | 16 | 264 | NA | 4 | 8 | 2 | 1 | 3 | 4 |
| 8 | | 7,00,207 | 3,836 | 32 | 43 | 1,312 | 47 | 6 | 10 | 16 | 5 | 13 | 18 |
| 9 | | 2,96,731 | 1,817 | 28 | 37 | 543 | 11 | 3 | 5 | 3 | 5 | 9 | 8 |
| Total BC | | 2,06,67,928 | 63,952 | 436 | 529 | 22,839 | 438 | 136 | 212 | 214 | 142 | 313 | 292 |
| 9 Castes | | | | | | | | | | | | | |
| Number | | 23,27,895 | 19,353 | 194 | 250 | 8,511 | 211 | 47 | 70 | 68 | 47 | 110 | 105 |
| Percentage | | 11.3 | 30.3 | 44.3 | 47.3 | 37.3 | 48.2 | 34.6 | 33 | 31.8 | 33.1 | 35.1 | 36.3 |
| Vol I Page 143, 144, 155, 156 | | | | | | | | | | | | | |



"1980 களில் பெரும் போராட்டத்திற்குப் பின்னரே மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்ற பிரிவு உருவாக்கப்பட்டது"

**சமமற்றத் தன்மை**

பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் வெறும் 11.3% மக்கட்தொகையில் இருந்த குறிப்பிட்ட ஒன்பது சமூகங்கள் கல்வியில் 30% சதவிகிதத்திற்கு மேலும், வேலைவாய்ப்புகளில் 37% சதவிகிதத்திற்கு மேலும் இருப்பது கண்டறியப்பட்டது. கெசட் வேலைவாய்ப்புகளில் 48.2% வரை இச்சமூகங்கள் இருந்தன.

இந்த ஒன்பது சமூகங்களில் ஐந்து சமூகங்கள் தமிழ் அல்லாத பிற மொழி சமூகங்கள். நான்கு மட்டுமே தமிழ் சமூகங்கள் ( உண்மையில் மூன்று மட்டுமே தமிழ் சமூகம். ஒரு தமிழ் சமூகம் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சாதிப் பெயர்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் நாம் அவற்றைக் குறிப்பிடவில்லை )

**பாதிப்பு**

இட ஒதுக்கீடு ஒரு சில சமூகங்களுக்கு மட்டும் மிகவும் பயன்பட்டிருப்பதை உணர்ந்த இக்குழு இச்சமூகங்களை இட ஒதுக்கீட்டில் இருந்து விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியது. ஆனால், இதில் உள்ள ஒரு தமிழ்ச் சமூகம் நகரங்களில் முன்னேறி இருந்தாலும் சில மாவட்டங்களில் பின்தங்கி இருந்ததால், அதைக் காரணம் கூறி அப்போது இருந்த திமுக அரசு அதை நடைமுறைப்படுத்தவில்லை. இதனால், பிற தமிழ்ச் சமூகங்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின.

1980 களில் பெரும் போராட்டத்திற்குப் பின்னரே மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்ற பிரிவு உருவாக்கப்பட்டது..

**பட்டியிலிடுவதில் ஏமாற்று வேலை**

இதைப் போலவே பல தமிழ்ச் சமூகங்களும் பிறமொழிச் சமூகங்களும் ஒன்றாகப் பட்டியிலிடப்பட்டன. எடுக்காட்டாக, யாதவா என்பதின் கீழ் தமிழ்ச் சமூகங்கள் மட்டுமல்லாமல் பிறமொழி சமூகங்களும் இதே பிரிவின் கீழ் சேர்க்கப்பட்டனர். இதனால், இதில் மக்கட்தொகை அடிப்படையில் அதிகமாக இருந்தபோதும் இட ஒதுக்கீட்டில் இழப்பைச் சந்தித்தனர். இப்போது வட மாநில சமூகங்களும் இதே பிரிவின் கீழ் சேரும் வழி உள்ளது. இது, இத்தமிழ்ச் சமூகத்தை மேலும் பாதிக்கும்.

**தமிழகத்தில் தமிழர்கள் 60% தானா?**

இப்போது தமிழகத்தில் திட்டமிட்டு ஒரு செய்தி பரப்பப்பட்டுவருகிறது. அது, தமிழகத்தில் தமிழர்கள் 60% இக்கும் குறைவு என்று சட்டநாதன் அறிக்கை மற்றும் அதன் பின் வந்த அம்பாசங்கர் அறிக்கையும் இதைப் பொய் என நிரூபிக்கின்றன. தமிழர்களின் ஒற்றுமையைக் குலைக்க சிலர் திட்டமிட்டு பரப்பும் புரளி ஆகும். பல நெசவு, கைவினைஞர்கள், இசைக் கலைஞர்கள் தமிழ்ச் சமூகங்களுடன் பிறமொழி சமூகங்கள் இணைக்கப்பட்டதன் விளைவு தான் இந்த புரளி. பெரும்பான்மை தமிழ்ச் சமூகமாக இருந்தபோதும் வடமொழி பெயர் சூட்டப்பட்டு பிறமொழி சமூகங்களாகக் காண்பிக்கின்றனர் சிலர். அவர்களுக்கு நடக்கும் அநீதியைப் புரிந்துகொள்ளாபல் இந்த வடமொழிப் பெயர்களையும் சில சமூகங்கள் பெருமை என நினைத்து ஏற்பது தான் கொடுமை.

எந்த சமூகமும் முன்னேறி வருவது வரவேற்கத்தக்கது. ஆனால், தமிழகத்தில் அது தமிழர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதாக இருக்கக் கூடாது. அதுவே நம் விருப்பம் . இது போல தற்போது நடுவண் அரசு கொண்டுவரும் உயர்சாதியினர்கான 10% பொருளாதார இடஒதுக்கீடும், இடஒதுக்கீடு தத்துவத்திற்கே எதிரானது.

- **இரா பால அரிதாசு**

**தங்களைப் பற்றி...**

என் சொந்த ஊர் திருவாரூர் மாவட்டம் இடும்பவனம். பள்ளிப்படிப்பு இடும்பவனத்திலேயே முடித்தேன். பின் பொறியியல் கணினி புதுக்கோட்டையில் படித்தேன்.

**நாம் தமிழரில் எவ்வாறு இணைந்தீர்கள்...?**

2009 இல் ஈழப்படுகொலை நடந்து கொண்டிருந்தது. முத்துக்குமார் அண்ணன் உயிர்த் தியாகம் செய்திருந்தார். அப்போது நான் புதுகையில் பல்தொழில்நுட்பம் படித்துக் கொண்டிருந்தேன். புதுகை பேருந்து நிலையத்தில் ஒரு பதாகையைப் பார்த்தேன். 'தமிழா உன்னைக் கொல்ல, உன் வரிப்பணத்தில் இருந்து ஆயுதமா?' என்று போட்டிருந்தது. அப்போது எனக்கு அது புரியவில்லை. பின்பு ஒரு வருடம் ஈழப்போராட்டத்தைப் பற்றி படித்தேன். அதன்பின்பு நாம் தமிழர் இயக்கத்தில் இணைந்தேன். நாம் தமிழர் அப்போது இயக்கமாக மட்டும் இருந்தது.

**தண்ணீர் பிரச்சனையை தமிழக அரசு கையாளும் விதத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

யாகம் வளர்ப்பதில் தான் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். தனி மனிதன் யாகம் வளர்ப்பதை, அவரது தனிப்பட்ட நம்பிக்கை என ஏற்றுக் கொள்ளலாம். மதச்சார்பற்ற அரசு யாகம் வளர்ப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஒட்டுமொத்தத் தமிழர்களையும் முட்டாள் கூட்டமாக காண்பிக்கும் செயல். ஆண்டுக்கு 950 மிமீ மழை தமிழகத்தில் பொழிகிறது. இதனை ஒருமுறை முறையாக சேமித்தாலே மூன்று வருடங்களுக்குப் பயன்படுத்த முடியும்.

**நாம் தமிழர் முன்வைக்கும் தீர்வுகள் என்ன?**

ஏரி குளங்களை முறையாகப் பராமரித்து, சங்கிலித் தொடர்போல இணைப்போம். மேலும் அவற்றைப் பாதுகாக்க வேலி அமைத்து, காவல் செய்வதற்கும் ஆட்கள் நியமிப்போம். இதன் மூலம் ஆக்கிரமிப்பைத் தடுப்போம். முறையாக பிளாஸ்டிக்கைத் தடைசெய்து நீர் செல்லும் கால்வாய்களை தூர் எடுப்போம்.

**அண்மையில் வேந்தர் தொலைகாட்சியில் ரசினி ஆதரவாளருடம் ஏற்பட்ட சிக்கல் என்ன?**



கருத்தோடு பதில் கூறினால் பேச முடியும். கருத்தே இல்லாமல் அவர் குற்றம் சாட்டினார் . நதிகள் இணைப்புப் பற்றி ரசினி பேசக் காரணம் காவிரி பிரச்சனையைப் பற்றி தமிழர்கள் பேசக்கூடாது என்பது தான். இதைக் கூறியபோது சமூக விரோதி என்றார்.

**கிராம சபை எங்கள் கண்டுபிடுப்பு என மநீம சொல்வது பற்றி...**

கிராமப்புற பொருளாதார வளர்ச்சி தான் நாம் தமிழரின் அடிப்படைக் கொள்கை . மநீம இப்போது அதைப் பற்றி பேசுவது மிகைப்படுத்துவது

**சுற்றுச்சூழல் அரசியலை தமிழகத்தில் முன்னெடுத்துச்சென்றது நாம் தமிழர் தான்ஆனால் ., இன்று ஊடகங்கள் இதைச் சொல்ல மறுப்பதேன்?**

கட்டப்பஞ்சாயத்து, ரவுடி அரசியலுக்கு முன், நாம் தமிழர் வேறுபட்டு நிற்கிறது. ஆயிரம் பனைத் திட்டம், குருதிக் கொடை என வாக்கு வங்கி அரசியலைத் தாண்டி மக்களுக்கு சேவையாற்றுகிறது. இதை, வழக்கம்போல் ஊடகங்கள் அங்கீகரிப்பதில்லை. எனினும் அதனை எதிர்பாராமல் நாம் செய்து கொண்டு தான் இருக்கிறோம்.

**மத்திய அரசின் செயல்பாடு எப்படி உள்ளது குறிப்பாக தமிழக தண்ணீர் . ...பிரச்சனையில்**

மத்திய ஆட்சி மோசமாகத்தான் உள்ளது ஒவ்வொரு சொட்டு நீரையும் சேமிக்க .

வேண்டும் எனும் பிரதமர் , மறைநீர் பற்றி பேசுவதில்லை இப்போது .'ஒரே நாடு ஒரே ரேசன் ', 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்கிறார்கள் மண்ணிற்கு . ஏற்றவாறு தான் திட்டங்கள் அமைய .முடியும் இவர்கள் ஒற்றுமையான நாட்டை விரும்புவதில்லை .'ஒரே .மாதிரியான நாட்டை விரும்புகிறார்கள்

**கிரண் பேடி தமிழர்கள் கோழைகள் எனக் கூறியது பற்றி...**

இந்தி எதிர்ப்பையும் சல்லிக்கட்டுப் போராட்டத்தையும் நடத்திக்காட்டியவர்கள் தமிழர்கள். இங்கு கிரண்பேடி யாருடைய குரலாய் ஒலிக்கிறார் என்பதே முக்கியம்.

**தமிழ்தேசியவாதிகளை பார்ப்பன அடிவருடிகள் என திராவிட இயக்கத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனரே...**

பார்ப்பன எதிர்ப்பாளர்கள் எனக் கூறிக்கொண்டு திராவிட கட்சியினர் கூட்டணி வைப்பது பார்ப்பனர்களோடு தான். ராகுல் காந்தி ஒரு கவுல் பார்ப்பனர். பெரியார் கொள்கையால் ஈர்க்கப்பட்டாலும், பூணூலைத் துறந்தாலும் ஒரு பார்ப்பனர் திராவிடர் கழகத்தில் இணைய முடியாது.

ஆனால், அவர்களே பார்ப்பனருடன் கூட்டணி அமைக்கின்றனர் இப்படி . உள்ளவர்கள் எப்படி எங்களை குற்றம் சாட்ட முடியும் ?

தலித் இயக்கங்களுக்கு மொழிவழி தேசிய இனங்களின் மீது நம்பிக்கையில்லை. தோழர் ரஞ்சித் போன்றவர்கள் தமிழன் என்று சொல்லி சாதி பேசாதீர்கள் என்கிறார்கள். உண்மையில், தமிழன் என்ற உணர்வு இருந்தால் சாதியே இருக்காது. ராசராச சோழன் நிலங்களை அபகரித்துவிட்டார் எனக் கூறும் ரஞ்சித் போன்றோர்கள் இதே சென்னையின் ஆதி குடிகள் நகரத்திலிருந்து வெளியேற்றப்படுவதைப் எதிர்த்து பேசுவதேயில்லை. எட்டுவழி சாலையில் மக்கள் வெளியேற்றப்படுவதை எதிர்ப்பதில்லை. மதவாதிகளை மக்கள் எதிர்க்குப்போது இது பெரியார் மண் என்கிறார்கள். சாதிய பிரச்சனைகள் எழும்போது தமிழர்கள் சாதியவாதிகள் என்கிறார்கள். பெருமை என்றால் திராவிட இயக்கம், பிரச்சனை என்றால் தமிழர்கள் தான் காரணம்.

இது திட்டமிட்டு தமிழர்களை இழிவுபடுத்தும் செயல்.

**பொதுவாழ்வில் நடந்த ஒரு மறக்கமுடியாத நிகழ்வைச் சொல்லுங்களேன்...**

காவிரி முற்றுகைப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு 45 நாட்கள் சிறையில் இருந்தபொழுது பயாஸ் அண்ணன், பேரறிவாளன் அண்ணன் அவர்களுடன் இருந்த நாட்களை மறக்க முடியாது

**கடைசியாக... தகவல் தொழில்நுட்பப் பணியாளர் பிரிவு இன்னும் எவ்வெவ்வகையில் செயல்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்...?**

விமர்சனங்களுக்குப் பதில் கூறுவது தேவையில்லாதது. விளக்கம் கேட்பவர்க்குப் பதில் கூறலாம். ஆனால், தேவையில்லாத விமர்சனங்களுக்குப் பதில் கூறும்போது நாம் முன்னோக்கிச் செல்ல முடியாது.

சுற்றுச்சூழல் பாசறை , குருதிக்கொடை என நாம் செய்யும் செயலைச் சொன்னாலேப் போதுமானது என நான் கருதுகிறேன்.



“நமது சிறப்பு விருந்தினர் பகுதியில் மாதம் ஒரு நாம் தமிழர் தோழரின் பேட்டி இடம்பெறும்"

**பேட்டி எடுத்தவர் - அறிவரன் பா**

# வந்துவிட்டார் இளவரசர்

இதோ வந்துவிட்டார் கோபாலபுரத்து அடுத்த இளவரசர் ,

திராவிடம் காக்க.

தமிழகம் தலை தூக்க.




திமுக கருணாநிதி குடும்பத்தின் சொத்தாகி நெடுங்காலமாகிவிட்டது. இப்போது அதன் அடுத்த மேனஜிங் டேரக்டராக வந்துள்ளார் உதயநிதி.

தமிழர்கள் இந்தி ஒழிப்புப் போராட்டத்தில் உயிரைக் கொடுத்து வளர்த்த இயக்கம் திமுக. இன்று அது கம்பெனியாகிப்போனது.

அங்கு உண்மையும் இல்லை. உண்மைத் தொண்டனும் இல்லை. முதல் போட்டு சம்பாதிக்கும் தொழில் அதிபர்களே உண்டு.

வெகு சீக்கிரம் உதயநிதி பற்றிய கட்டுக்கதைகளை ஆரம்பிப்பார்கள். குழந்தையாக இருக்கும்போது போராடினார், 15 வயதில் போராட்டத்தில் சிறை சென்றார் எனக் கதை கட்டுவார்கள். இதையும் நாம் எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையில் நாம் தமிழரின் பணி மிக முக்கியமாகியுள்ளது. தமிழகத்தை இவர்கள் பிடியிலிருந்து மீட்கும் கடினப் பணி நம் கையில் உள்ளது.

திமுக தன் கடைசிக் காலத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதே இவற்றைக் காட்டுகிறது.

இன்னும் அதிகபட்சம் ஒரு தேர்தல். அதன்பின் திமுக காணாமல் போகும்.

# விதைகளே பேராயுதம் - வீரம்மா செல்லமகன்

“கண்களில் நீர் தளும்ப இதைச் சொல்கிறேன் இருபதாம் நூற்றாண்டு செத்துவிட்டது”

என்ற ஆத்மநாம் வரிகளில் இருந்து தொடங்க நினைக்கிறேன்.

சமீபத்தில் ஒரு உயிரியல் யுத்தம் தொடங்கி இருக்கிறது. உணவு மற்றும் குளிர் பானம் தயாரிக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனமான பெப்சிகோ(PepsiCo), இந்தியாவின் குஜராத்தில் உள்ள விவசாயிகள் மீது ஒரு வழக்கு தொடர்ந்திருக்கிறது. வழக்கானது அந்த நிறுவனம் காப்புரிமை பெறப்பட்ட மரபணு மாற்றப்பட்ட உருளைக்கிழங்கு விதைகளை அனுமதியின்றி விவசாயிகள் பயிர் செய்ததற்காக நஷ்ட ஈடு கோரி.

அதாவது FL1867 மட்டும் WisChip என்ற உருளை கிழங்கு வகைகளில் இருந்து மரபணு மாற்றம் செய்யப்பட்டு அதில் இருந்து உருவாக்கப்பட்ட FL2027 உருளைக்கிழங்கு விதைகளுக்கு தாம் காப்புரிமை பெற்றுள்ளதாகவும் அந்த காப்புரிமை பெறப்பட்ட விதைகளை இந்திய முத்திரையின் படி FC5 வகைகளாக (Branded Seeds), அவர்கள் குறிப்பிட்டு அந்த வழக்கினை தொடர்ந்திருக்கிறார்கள்

Protection of Plant Variety and Farmers Right Act, 2001 (PPVFR Act) இந்த சட்ட திருத்தத்தில் Section 64 படி அவர்கள் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். பாதுகாக்கப்பட்ட காப்புரிமை பெறப்பட்ட விதைகளை முன் அனுமதி இன்றி பயிர் செய்ததற்காக.

இந்த உருளைக்கிழங்கானது பல நாட்டின் மிக முக்கியமான உணவுப் பொருட்களில் ஒன்றாக உள்ளது.1845-ல் அயர்லாந்தில் பஞ்சம் ஏற்பட்டு 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மனிதர்கள் பஞ்சத்தால் இறந்தார்கள். உருளைக்கிழங்கு சாகுபடியில் ஏற்பட்ட ஒரு நோய் தாக்கத்தின் காரணமாக உருளை கிழங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டு அதனால் 10 லட்சம் மனிதர்கள் உயிரிழந்ததாக வரலாறு.

குஜராத் விவசாயிகளில் 9 பேர் மீது தொடரப்பட்ட வழக்கில் ஆளுக்கு தலா ஒன்றரை கோடி ரூபாய் அபராதமாக தர வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்குதான் உலகத்தில் முதன் முதலில் விவசாயிகளுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்காகவும் குறிப்பிடப்படுகிறது. உழவு அழிவதற்கான அறிகுறி.

இது போன்ற வழக்கு தொடுத்தால் நமது விற்பனை பாதிக்கப்படும்

குளிர்பானம், குடிநீர், நொறுக்கு தீனி (Lays chips) போன்ற அதிக லாபம் ஈட்டக்கூடிய பொருள்களுக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பும் என்று அவர்களுக்கு தெரியும். இதெல்லாம் மீறி வழக்கினை தொடுத்திருக்கிறார்கள் எனும்போது நோக்கம் என்னவென்றால், ஒன்று.

எங்கள் உருளைக்கிழங்கு உற்பத்தி திட்டத்தில் விவசாயிகள் இணைந்து பணியாற்ற வேண்டும் இல்லையெனில் அவர்களால் உருளைக்கிழங்கு பயிரிட முடியாது. இதை நுட்பமாக கவனிக்க வேண்டும். நமது நீர்வளம், உழைப்பு, பேராற்றல், அவர்களின் வசம். முதலில் அவர்களின் ஒப்பந்தத்தில் இணைந்து உற்பத்தி செய்த விவசாயிகள் இறுதியில் நட்டம் ஏற்படவே அதிலிருந்து விளகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தத்தில் இணைந்திருக்கும் மீதமுள்ள விவசாயிகளை தக்க வைப்பதற்கான முயற்சியாகவும் இதை அணுக வேண்டும். இது அடிமை படுத்துதலுக்கான பாங்குதான்.

இந்த விதைக்கான காப்புரிமை 2016-ம் ஆண்டு முதல் இன்னும் 15 வருடத்திற்கு(2031 வரை) பெறப்பட்டிருக்கிறது.

நிலத்தில் விளைந்தவற்றை மனித அறிவால் மண்ணை திருத்தி, உழுது, உற்பத்தி செய்து பயிரிட்டு, பராமரித்து, சேகரித்து மீண்டும் உற்பத்தி செய்து இவ்வாறு சுழற்சி முறையில் தனது உணவு தேவையை நிறைவேற்றிக் கொண்டது மனித இனம்.

இயற்கையில் விளைகின்ற ஒரு பொருளை தனி ஒருவன் காப்புரிமை பெறமுடியும் என்றால் மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் எல்லாம் எப்படி இந்த உலகில் உயிர் வாழும். அவை உயிர் வாழவில்லை என்றால் மனித சுழற்சி எப்படி இயங்கமுடியும். இது எவ்வளவு பெரிய மூடச்செயல். வெறும் பணம் படைப்பதை மட்டுமே எவ்வாறு வாழ்வியலாக பார்க்க முடிகிறது இவர்களால்.

காப்புரிமை என்று சொல்லும் போதுதான் ஒரு சரித்திர சம்பவம் நினைவுக்கு வருகிறது. நமது நாட்டு வேப்ப மரத்திற்கு வெளிநாட்டவரால் காப்புரிமை பெறப்பட்டதாகவும் அதனால் இனிமேல் முன் அனுமதி இன்றி வேம்பு வளர்க்க கூடாது எனவும் ப்புரிமையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. ஜெர்மனியில் உள்ள சர்வேதேச நீதிமன்றத்தில் வாதாடி வெற்றிவாகை சூடி நம் பாரம்பரிய வேம்பை காப்பாற்றியவர், எமது தமிழ் கொடுத்த பெருமகன், முன்னெத்தி ஏர், இயற்கை மற்றும் மரபு


வேளாண்மைக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த விஞ்ஞானி ஐயா நம்மாழ்வார் அவர்கள்.

என்னடா இது போயும்போயும் ஒரு வேப்பமரத்திற்கு சர்வதேச நீதி மன்றம் போகணுமா என்று நினைக்க தோன்றும். ஆனால் இந்த போக்கு எங்கு போய் முடியும் என முன்னரே அறிந்த ஒரு தீர்க்கதரிசி. ஐயா சொன்னதுபோல் "இன்று வேம்பு, நாளை நெல்லுக்கு பங்கு கேட்டு வருவான் அன்னைக்கு நாம ஒரு பருக்க சோத்துக்கு வழி இல்லாம நிக்கபோறோம்". உலகத்தில் நெற்பயிர் பரவலாக்கம் செய்யப்பட்டதே நமது நெற்களஞ்சியம் தஞ்சையில் இருந்துதான்னு வரலாறு சொல்கிறது.

அன்றே நமது பாரம்பரிய நெற்பயிர்களை மீட்கும் பொருட்டு ஐயா நியமித்த ஒருவர்தான் சமீபத்தில் புற்றுநோயால் மறைந்த பெரும் மரியாதைக்குரியவர் திரு.நெல் ஜெயராமன் அவர்கள்.

ஆயுதத்தோடு எல்லை தாண்டி நம் நாட்டு மக்களை தாக்குகுவதையும் நம் நாட்டு விவசாயிகளின் மீது வழுக்கு தொடுப்பதையும் எவ்வாறு வேறுபடுத்தி காண முடியும் இரண்டுமே போர்தான். அது ஆயுத யுத்தம் இது உயிரியல்

"உங்கள் கண் முன்னே உங்கள் வளங்கள் கொள்ளை போகும் அதை பார்த்துக் கொண்டிருக்க நீங்கள் சபிக்கப்பட்டிருப்பீர்கள்" - ஜான் பெர்க்கின்ஸ்



உயிரியல் யுத்தம் அவ்வளவே. இவர்களின் நோக்கம் நம்மை கொஞ்சம் கொஞ்சமாக நமது மரபில் இருந்து நீக்கி, அறியாமையில் சிக்க வைத்து, இந்த நிலத்திலிருந்து நம்மை முற்றும் முழுவதுமாக அகற்றுவதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது ஆரம்பம்.

விழிப்போரே நிலை காண்பார் - ஆதலால்
விழுமின்! எழுமின்!
விதைகளே பேராயுதம்.

# மக்கள் களம்

அணுக்கழிவு சேமிப்பு மையம் அமைப்பதைக் கண்டித்தும் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்காத மாநில அரசைக் கண்டித்தும் நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் - வள்ளுவர்கோட்டம்(சென்னை)

21-06-2019

தலைமை: கி.வெங்கட்ராமன்
கண்டனவுரை: சீமான்

